கவன ஈர்ப்புகள்

(திரு. எப். எம். இராசரத்தினம்)

பட்டிருக்கிறது. ஆனால் கடியப்பட்டினம் பகுதிக்கான குடி நீர் திட்டத்திற்கு 10 நாட்களுக்கு முன்புதான் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அந்தப் பகுதியில் இன்னும் குடி தண்ணீர் வழங்கப்படவில்லை.

மேலும் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் முட்டம் பகுதியிலே இருக்கிற குடி தண்ணீர் பிரச்சினை பற்றி கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த போது, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கு 5 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் அந்தப் பகுதியில் அந்தப் பணி நடைபெறவில்லை. மேலும் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தினமும் பேருந்துகளிலும் கால்நடையாகவும் நடந்து சென்றுதான் குடி தண்ணீர் கொண்டு வருகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் லசமன் காலனி குடி தண்ணீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் அசுத்தம் கலந்த ஆற்று நீரும், குடி தண்ணீர் வழங்குகின்ற கிணற்று நீரும் ஒன்றாக கலந்து அந்தப் பகுதி மக்களுக்கு குடிப்பதற்கு பயன் பெறாத நிலையில் இருக்கிறது. அவர்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள். வாணியக்குடி, கீழ்குறும்பனை ஆகிய பகுதிகளிலே போடப்பட்ட குழாய்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இவைகளைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கடலோரக் கிராமங்களுக்கு குடி தண்ணீர் வழங்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அனைத்தையும் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(27) காவேரி படுகை விவசாயிகளுக்கு தமிழ்நாடு வாணிபக் கழகம் வழங்கும் இலவச உரக் கூப்பன்கள்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் கடந்த குறுவை அறுவடையின் போது மாநில உணவு வழங்கும் கழகத்தின் கொள்முதல் திட்டத்திற்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கு ஊக்கப் பரிசாக உரம் இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கான அடையாள வில்லைகள் கொடுக்கப்பட்டன. அவற்றில் காலவரையறை ஏதும் குறிப்பிடப்படாமல் இருந்த காரணத்தால் தேவையானபோது, இலவச உரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றிருந்த போது எதிர்பாராத வகையில் காலக்கெடுவை நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டதால் பெரும்பாலான விவசாயிகள் அப்பயனை அடைய முடியாமல் போய்விட்டமையால் அக்கால கெடுவை நீட்டித்து அரசாணை வெளியிடுவதன் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகள்

கவன ஈர்ப்புகள்

(திரு. ஜி.கே.ஜெ. பாரதி)

அனைவரும் அப்பயனைப் பெறச் செய்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஏக போக நெல் கொள்முதல் வகைக்கு உற்பத்தி பெருக்கு ஊக்க ஊதிய திட்டத்தின்கீழ் காவிரி படுகை விவசாயிகளுக்கு, அவர்கள் வாணிப கழகத்திற்கு விற்கும் நெல்லின் அளவினைப் பொறுத்து இலவச உரம் பெற்றுக் கொள்வதற்கான கூப்பன்கள் தற்போது வழங்கப் படுகின்றன. தமிழ்நாடு வாணிப கழகத்தால் வழங்கப்படும் இக் கூப்பன்களில் எந்த தேதி வரை செல்லுபடியாகும் என்ற கால வரையறை குறிக்கப்படவில்லை. எனினும், அரசு உற்பத்தி பெருக்கு ஊக்க ஊதிய திட்டத்தை முதல் முதலாக கொண்டு வந்தபோதும், பின்னர் இத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் குறுவை மற்றும் சம்பா பருவங்களுக்கு நீட்டித்த போதும், இத் திட்டத்தின கீழ் எந்தெந்த தேதி வரை உரக் கூப்பன்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கால வரையறையும், அவ்வாறு வழங்கப்பட்ட கூப்பன்களுக்கு எந்த தேதி வரை உரம் வழங்கப்பட வேண்டும் என்று கால வரையறையும் ஒவ்வொரு முறையும் முன் கூட்டியே நிர்ணயித்து அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அந்த வகையில் 1985 குறுவை பருவத்திற்கு இத் திட்டம் நீட்டிக்கப்பட்ட போதே இத்திட்டத்தின் கீழ் கூப்பன்கள் வழங்க கால வரையறை 1985ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் எனவும், அத் தேதி வரை வழங்கப்படும் கூப்பன்களுக்கு உரங்கள் பெற்றுக் கொள்ள காலவரையறை 1986ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் எனவும் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் இத் திட்டத்தின் கீழ் கூப்பன்களுக்கு உரங்களை கூட்டுறவு விவசாய சேவை சங்கங்கள் மூலம் வழங்கி வரும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் அரசு ஆணைகளுக்கு ஒப்ப அந்த அந்த உற்பத்தி ஊக்கத் திட்ட பருவ காலத்தில் வழங்கப்பட்ட கூப்பன்களுக்கு எந்த எந்தத் தேதி வரை உரங்கள் பெற்றுக் கொள்ளலாம் என்ற விவரத்தினை விவசாயிகள் அறியும் வண்ணம் அவ்வப்போது வானொலி மூலமாகவும் செய்தித் தாள்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்துகிறது. மேலும், இவ்விணையம் கடந்த குறு வை குறுவடைக் காலத்தில் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை வழங்கப்பட்டு பெறப்பட்ட ரூ. 10.69 கோடி மதிப்புக்கான 3,81,817 கூப்பன்

களில் 3,64,388 கூப்பன்களுக்கு ரூ. 10.52 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்கியுள்ளது. மீதமுள்ள ரூ. 17.76 இலட்சம் மதிப்புக்கான 17,429 கூப்பன்களுக்கு மட்டுமே விவசாயிகளிட மிருந்து குறித்த கால வரைக்குள் (1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ஆம் நாளுக்குள்) கூப்பன்கள் பெறப்படாத காரணத் தால் உரங்கள் வழங்கப்படாது நிலுவையாக உள்ளது. எனினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு குறுவை 1985 பருவத்தில் உரங்கள் வழங்கப்படாது நிலுவையாக உள்ள கூப்பன்களுக்கு சம்பந்தப்பட்ட விவசாயிகளும் பாதிக்கப்படாது உரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் 1985 குறுவைப் பருவ உற்பத்தி ஊக்கத் திட்டக் கூப்பன்கள் செல்லுபடியாகக் கூடிய காலத்தை நீட்டித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணைகள் பிறப் பிக்கப்படும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: தலைவர் அவர்களே, ' நடந் தாய் வாழி காவேரி ' என்று சொல்கிற காவேரிப் படுகையில் காதல் கொண்டிருக்கிற நம்முடைய வேளாண்மையாளர்கள் மற்றும் அவர்கள் மீது காதல் கொண்டிருக்கிற நம்முடைய தாளாண்மை கொண்ட அமைச்சர் பெருந்தகை, வாளாக இருக் காமல், தூளாக ஒரு ஆணை பிறப்பிப்பார்களா ? உரத்தின் கூப்பன்கள் செல்லுபடியாகின்ற வகையில் ஆணை பிறப்பிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய சம்பா சாகுபடியாளர்கள் மீது காட்டுகிற அந்த காதல் உணர்வை குறுவை சாகுபடியாளர் கள் மீதும் காட்ட வேண்டும். குறுவை என்பதே குறுகியது என்று பொருள். ஆகவே குறுகி கிடக்கிற தஞ்சைத் திருநகர வேளாண் பெருங்குடி மக்களுக்கு ரூ. 17.76 இலட்சம் மதிப்பிற்கு கூப்பன்கள் தருவதில் தடையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் தடைகளை நீக்கி அவை செல்லுபடியாகிற அளவிற்கு செய்ய வேண்டும். அதைச் செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பாரதியினுடைய கவிதை நடை கருத்தை ஏற்று, இந்தக் கூப்பன் களை வழங்குவதற்கு நாம் 1986ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15ஆம் நாள் வரைக்கும் கால நீட்டிப்பு தந்திருக்கிறோம் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(28) சென்னை, கொசப்பேட்டை வி. வி. கோயில் தெருவில் தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. ஜே. முகம்மது கனி: தலைவர் அவர்களே, ' சென்னை யில் பல பகுதிகளில் குடிநீர் வேகம் குறைந்து வருவதால் பொது மக்களுக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் குடிநீர் கிடைப் பதில்லை. எனவே கொசப்பேட்டை மற்றும் அதைச் சார்ந்